தினமணி

07.06.2025

**விசாரணை கைதிகள் பற்களை பிடுங்கிய வழக்கு: பல்வீர் சிங் ஆஜர்**

ஏஎஸ்பி பல்வீர் சிங் திருநெல்வேலி மாவட்ட முதலாம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வெ ள்ளி க்கிழமை ஆஜரானார் .

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் உள்கோட்டத்தில் விசாரணை கைதிகளின் பற்களை பிடுங்கியது தொடர்பான வழக்கில், பணியிடை நீக்கம் செய்யப்பட்ட ஏஎஸ்பி பல்வீர் சிங் திருநெல்வேலி மாவட்ட முதலாம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வெள்ளிக்கிழமை ஆஜரானார் .

அம்பா சமுத்திரம் உள்கோட்ட காவல் நிலையங்களில் கடந்த 2023ஆம் ஆண்டு விசாரணை கைதிகளில் பற்களை பிடுங்கியதாக அப்போதைய உதவி காவல் கண்காணிப்பாளர் பல்வீர் சிங் மீது, புகார் எழுந்தது. இது தொடர்பாக சேரன்மகாதேவி சார் ஆட்சியர் ரணை நடத்தியதைத் தொடர்ந்து பல்வீர் சிங் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். பின்னர் அவர் அளித்த விளக்கத்தின் அடிப்படையில் அவரது பணியிடை நீக்க உத்தரவு ரத்து செய்யப்பட்டது. பற்கள் பிடுங்கப்பட்ட விவகாரம் தொடர்பாக திருநெல்வேலி மாவட்ட சிபிசிஐடி போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

அதைத் தொடர்ந்து பல்வீர் சிங் உள்ளிட்ட 14 பேர் மீது கீழ் 4 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இந்த வழக்கு விசாரணை திருநெல்வேலி முதலாவது குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இந்த வழக்கு குற்றவியல் நீதித்துறை நடுவர் சத்யா முன்னிலையில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, ஐபிஎஸ் அதிகாரி பல்வீர் சிங் உள்ளிட்டோர் ஆஜராகினர்.

பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் மாடசாமி, இந்த வழக்கை மனித உரிமை மீறல் வழக்காக கருதி மாவட்ட நீதிமன்றத்துக்கு மாற்ற வேண்டும் என கோரிக்கை விடுத்தார். அது தொடர்பாக அளிக்கப்பட்ட மனுவையும் குற்றவியல் நீதித்துறை நடுவர் ஏற்றுக்கொண்டார் .

https://www.dinamani.com/all-editions/edition-thirunelveli/thirunelveli/2025/Jun/06/%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%9A%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%A3%E0%AF%88-%E0%AE%95%E0%AF%88%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%95%E0%AE%B3%E0%AE%BF%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%B1%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B3%E0%AF%88-%E0%AE%AA%E0%AE%BF%E0%AE%9F%E0%AF%81%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AE%BF%E0%AE%AF-%E0%AE%B5%E0%AE%B4%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AF%81-%E0%AE%AA%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%B5%E0%AF%80%E0%AE%BE%E0%AF%8D%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%99%E0%AF%8D-%E0%AE%86%E0%AE%9C%E0%AE%BE%E0%AF%8D